**C.C. No. 122/2021** **04.05.2023**

**PW**1 முருகப்பன்

**<u>ம.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் கடந்த 22 வருடங்களாக Western Union Money transfer மூலம் வெளிநாட்டிலிருந்து வரும் வெளிநாட்டு பணத்தை இந்திய ரூபாயாக மாற்றி தரும் தொழில் செய்து வருகிறேன். நான் Perfect Foreign exchange என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன். Perfect Foreign exchange என்ற நிறுவனம் மூலம் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தை வாங்குவது மற்றும் இந்திய பணத்தை வெளிநாட்டிற்கு அனுப்புவது, வங்கிகள் உடன் டையப் வைத்து பணபரிமாற்றம் செய்து வருகிறோம். நான் எத்தனை வங்கிகளில் கணக்கு வைத்திருக்கிறேன் என்றால் 5 முதல் 6 வங்கி கணக்கு வைத்திருக்கிறேன். எனக்கு பங்குசந்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரி பங்குசந்தையில் முதலீடு செய்து தருவதாக கூறியதால் பணம் கொடுத்ததாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான்.

2) பொதுவாக, பங்குசந்தை பணபரிவர்த்தனைகள் அனைத்தும் வங்கி பரிவர்த்தனை மூலம் தான் நடைபெறும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. உண்மையிலேயே எனக்கு பங்குசந்தை பரிவர்த்தனைகள் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பெரிய தொகையை எந்த விவரமும் தெரியாமல் முதலீடு செய்வதற்காக கொடுத்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்னிய செலவாணியில் 22 வருட அனுபவமும், பல்வேறு வங்கிகளுடன் ஒன்றாக தொழில் செய்து வரும் பங்குசந்தை குறித்து தெரியாது என்று கூறுவது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல.

3) பங்குசந்தையில் எனது பணத்தினை முதலீடு செய்தது சம்பந்தமாக எதிரியிடமிருந்து ஆவணங்கள் வாங்கினேனா என்றால் இல்லை, நம்பிக்கையின்பேரில் கொடுத்தேன். பொதுவாக, பங்குபரிவர்த்தனை செய்வதற்கு அந்தெந்த நபர்கள் மூலம் செய்து கொள்ளலாம் என்றும் முதலீடு செய்த நபர்கள் பெயரிலேயே டிமேட் அக்கவுண்ட், டிரேடு அக்கவுண்ட் ஆரம்பிக்கலாம், அதை Password கொடுத்து புரோக்கர் பயன்படுத்தி வாணிபம் செய்வார்கள் என்றால்

சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எவ்வளவு லாபம் பெற்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையாக பங்கு வாணிபத்தில் முதலீடு செய்திருந்தால் நான் எவ்வளவு லாபம் பெற்றேன் என்ற விவரத்தை வழக்கில் கூறியிருப்பேன் என்றால் வழக்கில் கூறவில்லை.

4) ம.சா.ஆ.1 பேரேடில் யுவராஜிடம் பங்குவாணிபம் செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.1 தணிக்கை செய்யப்பட்டதாக தணிக்கையாளரின் கையொப்பமும், முத்திரைமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.1 ஆவணம் வருமான வரி தாக்கல் செய்வதற்கு முன்பாக தாக்கல் செய்ததால் அதில் தணிக்கையாளரின் கையொப்பம் இல்லை. ம.சா.ஆ.1 ஆவணத்தில் மொத்தம் மூன்று பக்கங்கள் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணம் கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதா என்றால் ஆடிட்டர் கொடுத்தார். இந்த ஆவணம் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த ஆவணத்தைப்பற்றி எந்த விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல.

5) 28.06.2020 ரொக்கமாக ரூ.5,95,000/- எதிரி வசம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியிலிருந்து 02.07.2020 தேதி வரை ரூ.10 லட்சத்து 74 ஆயிரத்து 100 எதிரியின் வங்கி கணக்கிலிருந்து பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதுவரை நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக பதிவு இல்லை என்றால் சரிதான். நான் ரூ.5,95,000/- எதிரியிடம் முதலீடு செய்வதற்கு கொடுத்ததாகவும், ரூ.10,74,100/- திரும்ப பெற்றதாக உள்ளது என்றாலும் வழக்கிற்காக இந்த ஆவணத்தை உற்பத்தி செய்ததால் கணக்குகளை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் 22.09.2020 தேதியிலிருந்து 20.01.2021 தேதி வரை எதிரியிடம் ரூ.42,49,637/- கொடுத்துள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) 22.09.2020 தேதிக்கு பிறகு ரூ.7,20,000/- மட்டுமே எதிரியிடமிருந்து

பெற்றதாக ம.சா.ஆ.1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் அது முழுமை பெறாத ஆவணம் என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணம் இந்திய சாட்சிய சட்டப்படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. பெரிய தொகை எனக்கு எப்படி கிடைத்தது என்று ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் ரொக்கமாக எவ்வளவு கொடுத்தேன் என்றும் வங்கி மூலம் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) எனது கணக்கு படி வங்கி மூலமாக எதிரியிடம் கொடுத்த தொகை ரூ.18,05,000/- என்றால் கணக்கு பார்த்தால் தான் தெரியும்.நான் எதிரியிடம் கொடுத்த பணத்தை எல்லாம் எதிரியின் வங்கி மூலம் முறையாக பெற்றுக்கொண்டேன் என்றாலும் வழக்கிற்காக ஆவணங்களை உற்பத்தி செய்து இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தனது வங்கி கணக்கு மூலம் ரூ.54,17,689/- திருப்பி செலுத்தியுள்ளார் என்றால் அவ்வளவு இருக்காது, பார்த்து தான் சொல்லமுடியும். பணம் பெற்ற விவரம் எனக்கு தெரியும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ன்படி 22.09.2020 க்கு பிறகு நான் எந்தவொரு பணமும் எதிரியிடமிருந்து பெறாமல் தொடர்ந்து முதலீடு செய்து வந்ததற்கு என்ன காரணம் என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

8) எதிரியின் மூலம் முதலீடு செய்த பணம் திருப்பி வராதபோது தொடர்ந்து முதலீடு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணத்தில் எதிரி பூர்த்தி செய்யாத கையொப்பம் மட்டும் செய்த இரண்டு கடனுறுதிச்சீட்டுகளும், ஐந்து காசோலைகள் மற்றும் இரண்டு வெற்றுத்தாள்கள் கொடுத்ததாக சொல்லியிருக்கிறார், அதை மறுத்து எனது புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. ம.சா.ஆ-4

ஆவணத்தில் நான் perfectexchange@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலிருந்து yuvaraj.madura@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தேதி குறிப்பிடப்படாத, எதிரியின் கையொப்பம் மட்டும் செய்த, பூர்த்தி செய்யப்படாத ம.சா.ஆ.2 வழக்கு காசோலை மற்றும் எதிரியின் IndusInd காசோலை எண்கள் 546731, 546733 மற்றும் தேதி குறிப்பிடப்படாத, எதிரியின் கையொப்பம் மட்டும் செய்த, பூர்த்தி செய்யப்படாத இரண்டு கடனுறுதிச்சீட்டுகள் மற்றும் இரண்டு வெள்ளைத்தாள்கள் ஆகியவற்றை அனுப்பியுள்ளீர்கள் என்று கூறியதை மறுத்து எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, ரிஜாயிண்டரிலோ, புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ கூறியுள்ளீர்களா என்றால் இல்லை. வழக்கு காசோலையை எதிரியிடமிருந்து பெற்ற தேதியன்றே வசூலுக்கு செலுத்தியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

9) எனது புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ, அறிவிப்பிலோ எங்கு வைத்து, எந்த தேதியில் காசோலையை வாங்கினேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால், எனது புகாரிலும், நிரூபணவாக்குமூலத்திலும் காசோலையை வாங்கிய தேதியிலேயே வசூலுக்கு தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரிலும், அறிவிப்பிலும் வாங்கிய தேதியிலேயே காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததாக சொல்லிவிட்டு, தற்போது வழக்கிற்காக மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரிலும், அறிவிப்பிலும் எதிரிவசம் முதலீடு செய்வதற்காக மொத்த தொகையாக ரூ.89,85,687/- கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். புகார் தாக்கல் செய்தபோதே ம.சா.ஆ.1-ம் தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும்.

10) நான் புகார்தாக்கல் செய்தபோதே ம.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் தாக்கல் செய்தபிறகு, எனது நிரூபணவாக்குமூலத்தில் ரூ.89,85,687/-தொகையை ரூ.95,85,687/- என்று திருத்தம் செய்துள்ளேன் என்றால் ஆடிட்டர் கணக்கு பார்த்து சொன்னபிறகு, அவ்வாறு திருத்தம் செய்தேன். இது சம்பந்தமான ஆவணத்தை எனது வழக்கறிஞர்

மூலமாக தாக்கல் செய்தேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வித்தியாச தொகை ரூ.6 லட்சம் என்று எனது 02.11.2022 அன்று தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆவணங்கள் எல்லாம் பின்யோசனையின்பேரில் வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11) முறையாக சட்டப்படி மனு செய்து எதிரிக்கு அறிவிப்பு கொடுத்து திருத்தம் செய்யவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தொகையில் செய்யப்பட்ட மாற்றம் வழக்கின் தன்மையை திருத்தத்தை ஏற்படுத்தும் என்றாலும் இது போன்ற மாற்றங்கள் முறையாக மனு செய்து தான் செய்யப்படவேண்டும் என்றால் மனு செய்து தான் தாக்கல் செய்துள்ளேன். நான் செய்த திருத்தம் சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும், பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களுக்கும் மை வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை, ஒன்றுபோல்தான் உள்ளது.வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும், பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களுக்கும் மை வித்தியாசம் இல்லை என்று நான் வேண்டுமென்றே பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12) இது சம்பந்தமாக கையெழுத்து நிபுனருக்கு அனுப்பி அறிக்கை பெற்றால் வித்தியாசம் தெரியவரும் என்றால் இருக்கலாம். நான் சொன்னமாதிரி, சொன்ன விதத்தில் வழக்கு காசோலை எதிரியால் எனக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடனிற்காக கொடுத்த காசோலையை கடனைத் திருப்பி செலுத்திய பின்பும் ஆவணங்களை மோசடியாக தயாரித்து, பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.எனது சட்ட அறிவிப்பிற்கு முன்பே 24.07.2021 அன்று எதிரி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். எதிரியின் வழக்கறிஞர் அறிவிப்பை மறுத்து நான் எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் வழக்கறிஞர் கொடுத்திருப்பார், ஆனால் இவ்வழக்கு ஆவணங்களில் இல்லை. எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல, வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13) அவ்வாறு பதிலறிவிப்பு அனுப்பியிருந்தால் வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி தனது வழக்கறிஞர் அறிவிப்பு என்னிடமிருந்த காசோலைகள், கடனுறுதிச்சீட்டுகள், வெற்றுத்தாள்கள் திருப்பி கேட்டிருந்தார் என்றாலும் அதனை நான் திருப்பி தராமல் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல, என்னிடம் அவ்வாறு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. 546733, 546735 ஆகிய இரண்டு காசோலைகளைப் பயன்படுத்தி எனது நண்பர் சதீஸ்குமார் மூலம் எதிரியின் மீது ரூ.50 லட்சம் தொகை கேட்டு, இரண்டு வெவ்வேறு காசோலை மோசடி வழக்குகள் C.C.No.159/2021, C.C.160/2021 தாக்கல் செய்து, இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, அதற்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை.

14) எதிரி என்னிடம் கொடுத்த நிரப்பப்படாத காசோலைகளை வைத்து தான் இந்த வழக்கினையும், நண்பர் சதீஸ்குமார் மூலம் மேற்சொன்ன இரண்டு வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த சூழ்நிலையிலும் நான் சொன்னதுபோல், ரூ.95,85,689/- முதலீடு செய்து தருவதாக சொல்லி பெறவில்லை என்றும் அதன்பேரில், வழக்கு காசோலையைக் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.